ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ரு'தி$_3$ ॥

நம்மாழ்வார் அருளிச்செய்த

# ॥ அணைவது ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமானுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ அணைவது ॥

எம்பெருமானது வீடளிக்கும் தன்மை

‡அணைவதரவணைமேல்⋆ பூம் பாவை ஆகம்
புணர்வது⋆ இருவர் அவர் முதலும் தானே⋆
இணைவனாம் எப்பொருட்கும்⋆ வீடு முதலாம்⋆
புணைவன்⋆ பிறவிக் கடல் நீந்துவார்க்கே (1)

நீந்தும் துயர்ப் பிறவி⋆ உட்பட மற்றெவ்வெவையும்⋆
நீந்தும் துயர் இல்லா⋆ வீடு முதலாம்⋆
பூந் தண் புனல் பொய்கை⋆ யானை இடர் கடிந்த⋆
பூந் தண் துழாய்⋆ என் தனி நாயகன் புணர்ப்பே (2)

புணர்க்கும் அயனாம்⋆ அழிக்கும் அரனாம்⋆
புணர்த்த தன் உந்தியோடு⋆ ஆகத்து மன்னி⋆
புணர்த்த திருவாகித்⋆ தன் மார்வில் தான் சேர்⋆
புணர்ப்பன் பெரும் புணர்ப்பு⋆ எங்கும் புலனே (3)

புலன் ஐந்துமேயும்⋆ பொறி ஐந்தும் நீங்கி⋆
நலம் அந்தம் இல்லதோர்⋆ நாடு புகுவீர்⋆
அலமந்து வீய⋆ அசுரரைச் செற்றான்⋆
பல முந்து சீரில்⋆ படிமின் ஓவாதே (4)

ஓவாத் துயர்ப் பிறவி⋆ உட்பட மற்றெவ்வெவையும்⋆
மூவாத் தனி முதலாய்⋆ மூவுலகும் காவலோன்⋆
மாவாகி ஆமையாய்⋆ மீனாகி மானிடமாம்⋆
தேவாதிதேவ பெருமான்⋆ என் தீர்த்தனே (5)

தீர்த்தன் உலகளந்த⋆ சேவடிமேல் பூந் தாமம்⋆
சேர்த்தி அவையே⋆ சிவன் முடிமேல் தான் கண்டு⋆
பார்த்தன் தெளிந்தொழிந்த⋆ பைந் துழாயான் பெருமை⋆
பேர்த்தும் ஒருவரால்⋆ பேசக் கிடந்ததே (6)

www.prapatti.com

கிடந்திருந்து நின்றளந்து⋆ கேழலாய்க் கீழ் புக்-
    கிடந்திடும்⋆ தன்னுள் கரக்கும் உமிழும்⋆
தடம் பெருந் தோள் ஆரத் தழுவும்⋆ பார் என்னும்
    மடந்தையை⋆ மால் செய்கின்ற மால்⋆ ஆர் காண்பாரே (7)

காண்பார் ஆர் எம் ஈசன்⋆ கண்ணனை என் காணுமாறு⋆
    ஊண் பேசில்⋆ எல்லா உலகும் ஓர் துற்றாற்றா⋆
சேண் பால வீடோ⋆ உயிரோ மற்றைப் பொருட்கும்⋆
    ஏண் பாலும் சோரான்⋆ பரந்துளனாம் எங்குமே (8)

எங்கும் உளன் கண்ணன் என்ற⋆ மகனைக் காய்ந்து⋆
    இங்கில்லையால் என்று⋆ இரணியன் தூண் புடைப்ப⋆
அங்கப்பொழுதே⋆ அவன் வீயத் தோன்றிய⋆ என்
    சிங்கப் பிரான் பெருமை⋆ ஆராயும் சீர்மைத்தே (9)

சீர்மை கொள் வீடு⋆ சுவர்க்கம் நரகீறா⋆
    ஈர்மை கொள் தேவர் நடுவா⋆ மற்றைப் பொருட்கும்⋆
வேர் முதலாய் வித்தாய்ப்⋆ பரந்து தனி நின்ற⋆
    கார் முகில் போல் வண்ணன்⋆ என் கண்ணனை நான்
                                        கண்டேனே (10)

‡கண் தலங்கள் செய்ய⋆ கரு மேனி அம்மானை⋆
    வண்டலம்பும் சோலை⋆ வழுதி வள நாடன்⋆
பண் தலையில் சொன்ன தமிழ்⋆ ஆயிரத்திப்பத்தும் வல்லார்⋆
    விண் தலையில் வீற்றிருந்தாள்வர்⋆ எம்மா வீடே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com